புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சுஜாதா படைப்புகளில் மருத்துவம்

திருமதி பா. மோகனப்பிரியா
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தி ஸ்டாண்டர்ட்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி, சிவகாசி

ஆய்வு சுருக்கம்

சுஜாதாவின் விஞ்ஞான சிறுகதைகளில் குறிப்பிட்டுள்ள மருத்துவ செய்திகள் யாவும் இன்றைய சூழலும் எதிர்காலத்தில் நிகழக்கூடியதை முன்னதாகவே வெளிப்படுத்துவதாக உள்ளது. இன்றைய காலகட்டத்தில் மருத்துவமனைகளில் செய்யப்படுகின்ற ஊடுகதிர் *(scan)* வழியாகவும் மருந்துகளினாலும் குழந்தை பிறக்கும் சூழல் உருவாகியுள்ளது. உணவு பழக்கவழக்கங்களினால் செயற்கை கருத்தரித்தல் மையங்கள் பல்கி பெருகியுள்ளன. செயற்கையாக *AI (Artificial Intelligence)* உருவாக்கத்தினால் சிலிக்கன் போன்ற வடிவில் மனிதர்கள் உருவாக்கப்படுகின்றன. வயது முதுமையாகமல் இருக்க பல்வேறு உணவுமுறைகளையும் உடல்பயிற்சிகளையும் செய்கின்றனர். மூளையில் சிப்புகளை பொருத்தும் அளவிலும் மூளை குறித்த பல ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன. சூரியகதிர்வீச்சு அதிகமாவதும் ஊட்டசத்து குறைபாடு ஏற்படும் சூழலினைக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, இன்றைய சூழலிலும் எதிர்காலத்தில் நடக்கக்கூடிய சாத்தியங்களையும் விளக்குவதாக இவ்ஆய்வு அமைந்துள்ளது.

## முன்னுரை

சுஜாதா தன் படைப்புகளின் வழி அறிவியல் புதுமைகளை வெளிப்படுத்தியுள்ளார். முந்தைய காலகட்டத்தில் வெளியான படைப்புகளே ஆனாலும், அவை இன்றைய காலகட்டத்தினை பிரதிபலிப்பதாகவே உள்ளது. மரபணு மாற்றங்கள், செயற்கை குழந்தை உருவாக்கம்,முதுமை வராது வழும் சூழலை உருவாக்குதல், மூளை செயல்பாடுகளை உருவாக்கம் செய்தல், சூரிய கதிர்களின் வீச்சினால் ஏற்படும் உடல் மாற்றங்கள் என மருத்துவமுறையினைக் குறித்த அறிவியல் கருத்துக்களை சுஜாதாவின் விஜ்ஜான சிறுகதைகளின் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

## ஆய்வு அணுகுமுறை

அறிவியல் வழி அணுகுமுறை திறனாய்வு வாயிலாக விளக்கப்பட்டுள்ளது. சார்பியல்கோட்பாட்டில், எதிர்காலம் என்பதும் முக்கியமான பரிமாணம் ஆகும். தமிழில் விஞ்ஞான புனைகதைகள் எழுதுவதில் சுஜாதா வல்லவர். அறிவியல் புனைகதைகள் என்பது எல்லையற்ற கற்பனையில் ஆதாரமான ஒரு கருத்தினை மையமிட்டு, கதையினை வாசகர்களுக்கேற்ப படைப்பதாகும்.

## மரபணு விஞ்ஞான ஆராய்ச்சி

குரோமோசோம்களைக் கொண்டே குழ்ந்தை ஆண், பெண் என பாகுபடுகின்றது. இன்றைய சூழலில் பல கருத்தரித்தல் மையங்கள் உருவாகியுள்ளன. எதிர்காலத்தில் அரசாங்கம் குழந்தைபேறு பற்றி குறிப்பிடுவதாக,

*'ஜெனட்டிக் ஆராய்ச்சியாளர்களை ஏவி, பிறப்பின் டி. என். ஏ. ரகசியத்தைப் பிரித்துப் பார்த்து, கிரோமாஸோம்களுக்குத் தக்க தருணத்தில் செய்தி தந்து, கர்ப்பவாசமில்லாமல், வேண்டுமென்றபோது அஜெலாவில் (அரசு ஜெனிட்டிக் லாபில்) கணக்கிடப்பட்டு அரசால் கட்டுப்படுத்தப்பட்ட பிறப்பு...*

*மனித இனத்தில் எவரும் பிள்ளைப்பேறு என்னும் அந்நியாயச் சுமையைத் தாங்க வேண்டியதில்லை.*

*ஒரே ஒரு சிக்கல். அத்தனை பேரும் ஆண்கள்! ஆண்களின் உலகம். அந்த அசெக்ஷுவல் முறையில் இதுதான் குறை.*

*அதனால் செயற்கைப் பெண்கள், செயற்கை செக்ஸ், செயற்கைக் குரல்கள், செயற்கைச் சரசங்கள் – அத்தனையும் இருந்தும் அதில் கிடைத்த சந்தோஷங்களில் ஒருவிதமான அதிருப்தி ஜரிகையிட்டிருந்தது.*

*தடை செய்யப்பட்ட உறவு முறைகளினால் பெண்களின் ஜனத்தொகை மளமளவென்று சரிந்துபோய் பெண் என்னும் இனமே அழிவின் விளிம்பில் இருக்கும் இனம் என்று அரசு அறிவித்தது...அபாய எல்லையில் உள்ள இனமாக அறிவிக்கப்பட்டு அரசின் உச்ச பாதுகாப்பில் வைத்து செல்லமாக வளர்க்கப்பட்டு, வருஷத்துக்கு ஒருமுறை அல்லது இருமுறை மக்களுக்குக் காட்சியாகக் காட்டப்படுகிறார்கள்...' ( சுஜாதா, வாசனை., ப எண்., 429 )*

*பெண்கள் காட்சி பொருளாக மாறும் சூழலினையும் செயற்கை குழந்தைகளே ஆராய்ச்சி கூடங்களில் உருவாவதை இங்கு குறிப்பிட்டுள்ளது.*

*''பிரிட்டன் மருத்துவர்கள் சூலகத்திலிருந்து லேப்ரோஸ்கோபி முறையில் கருமுட்டையை எடுத்தனர். கருமுட்டையை எடுத்தனர். கருப்பையிலும் அதேமுறையில் வைத்தனர். அந்தமுறையில் வெற்றி விகிதம் குறைவு. ஆனால், சுபாஷோ இயல்பான பிறப்புறுப்பு (Transvaginal) வழியாகவே இந்த நிகழ்வுகளைச் செய்ய முடியும் என்று நிரூபித்தார். இன்று சுபாஷின் முறையே உலகம் முழுவதும் பின்பற்றப்படுகிறது.''[1]*

*இன்றைய திருமண வயதை நீட்டித்தல், உணவு பழக்கங்களினால் பெண்கள் பெரும்பாலானோருக்கு கருப்பை நீர்க்கட்டி ஏற்பட்டு இயற்கையான குழந்தை பிறப்பு ஏற்படும் சூழல் காலதாமாகின்றது.*

*நவீன மருத்துவம்*

*செயற்கையாக சிலிக்கன் இயந்திர மனிதன் உருவாக்கம். நவீன மருத்துவத்தால் எத்தகைய சிகிச்சையும் சாத்தியமாகும் என்பதனை,*

*'இன்று கண்ணன் பூரண குணமாகித் திரும்பி வருகிறான். வாசலில் மின்சார வீதி வண்டி நிற்க, அதன் கதவுப் பெருமூச்சு கேட்டது. நித்யாவுக்கு இதயம் துடிக்க மானிட்டர் 'ஜாக்கிரதை, அலட்டிக் கொள்ளாதே. இதயத்துடிப்பு எல்லை மீறுகிறது. மருந்து சுரக்கும்' என்றது. நித்யா தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். மருந்து சுரந்தால் தூக்கம் வரும்.*

*''முகத்தில் தழும்பு ஏதும் இல்லை. நல்ல வேளை!''*

*' சிகிச்சையின் சாகசம். இருபத்தோராம் நூற்றாண்டு என்றால் சும்மாவா? இவன் பிழைத்து வந்தது நவீன மருத்துவத்தின் மிகப்பெரிய சாதனை*

*சாப்பிடு சாப்பிடு என்கிறாள். எனக்கு அது புரியவே இல்லை. அவள் கொடுப்பதை எல்லாம் எனக்குள் போட்டால் என்னுள் இருக்கும் ஸிலிக்கன் கம்ப்யூட்டர் பாதிக்கப்படும்.*

*முதல் மகன் இறந்துவிட்ட அதிர்ச்சியைத் தாங்கி கொள்கிற நிலையில் இல்லை அவள். அதிகபட்சம் மூன்று மாதம் அவள் மகனாக இருக்க வெண்டும் நீ*

*வெளித்தோற்றம் தத்ரூபம்தான். அப்படியே என் மகன் போல இருக்கிறாய். ஆனால் நடை, உடை பாவனையில்தான் இன்னும் கொஞ்சம் நன்றாக செய்ய வேண்டும்'...*

*(சுஜாதா.,பிரதி மகன்., பக். எண்., 353-358)*

*மனிதனை ஒத்த இயந்திர மனிதன் உருவாகும் நிலையும் அதன் செயல்பாடுகளையும் விளக்குகின்றது.*

*''அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர்கள் ஸைபார்க் (CYBORG) என்று சொல்கிற மாற்று மனிதன் உருவாகிவிடுவான் என்று தோன்றுகிறது! பிளாஸ்டிக் மண்டையோடு, அக்ரிலிக் கண்கள், பிளாஸ்டிக் காது, பற்கள், தாடை, எலக்ட்ரானிக் தொண்டை, சுவாச வாசலில் ரத்த சுத்திக்காக ஃபில்டர் பேஸ் மேக்கர், வலுவான இதய வால்வுகள், டேக்கரான் ரத்த ரத்த நாளங்கள்,*

*செயற்கைப் புஜங்கள், கை, கால், மூளை, முழங்கால் மூட்டு, ப்ளாஸ்டிக் விரல்கள், மூளைக்குச் செல்லும் நீரைக் கட்டுப்படுத்தும் வால்வு, காது கேட்க ஹியரிங் எய்டு, அழகான ப்ளாஸ்டிக் மூக்கு...இவை அனைத்தும் ஒவ்வொன்றாக அமைத்துக் கொண்டு வாழ்நாளை நீட்டிக்கொண்டே போகலாம்.''*[2]

*நவீன மருத்துவ வளர்ச்சியினால் செயற்கையாக உடல்பாகங்கள் பொருத்தப்பட்டு வாழும் நிலையினை குறிப்பிடுகின்றது.*

*காயகல்ப மருந்து*

*உடல்நலத்துடனும் இளமையுடன் வாழ்வதற்கு மக்கள் உடற்பயிற்சி, உணவுமுறைகளில் பல மாற்றங்களை செய்கின்றன. இதனை,*

*' அவர் சாப்பிட்டது காயகல்பம் இல்லை. அது தேவலோகத்துக் கற்பனை. அவர் மருந்துக்கு ஸைண்டிஃபிக்கா எக்ஸ்ப்ள்னேஷன் இருக்கிறது பையா. முதுமைங்கறது எதனால வருகிறது தெரியுமா? எல்லாவற்றுக்கும் இருதயத் துடிப்புதான் காரணம். ஒவ்வொருத்தருக்கும் வாழ்க்கையிலே மொத்தம் இவ்வளவு இருதயத் துடிப்புன்னு கணக்கு. இருதயம் ஒரு மிஷின். அதன் ஆரோக்கியத்திற்கு ஏற்ப இத்தனை தடவை அடிச்சதும் மிஷின். அதன் ஆரோக்கியத்திற்கு ஏற்ப இத்தனை தடவை அடிச்சதும் மிஷின் கடிகாரம்போல நின்று போய்விடுகிறது. வாழ்நாள் என்கிறது இவ்வளவு இதயத் துடிப்பு என்றுதான் கணக்கு. மேலே உட்கார்ந்திருக்கிறாரே மகான், செந்தில்நாதப்புலவர், அவருடைய இருதயம் நிமிஷத்துக்கு நூறு தடவை அடிக்கிறதில்லை. இரண்டே இரண்டு தடவைதான்!*

*அவர் இருதயத் துடிப்பை நான் கார்டியோகிராம் ஒன்று கொண்டு வந்து ரிகார்ட் பண்ணிக்கூடப் பார்த்தேன். சரியா நிமிஷத்துக்கு இரண்டு தடவைதான் அடிக்கிறது... இந்த ரேட்டுக்கு ஏற்ப அவருடைய மெடபாலிஸமே மாறிவிட்டது'*

*(சுஜாதா.,1000 வரு உ இ எ? 49)*

*அவரவர் வாழும் சூழலுக்கும் பழக்கவழங்களே நம் ஆயுளை தீர்மானிக்கின்றன. இருதய துடிப்பும் அதனை பொருத்ததே ஆகும்.*

*''திசுக்கள், உயிரணுக்கள் தினம் தினம் தம்மைப் புதுப்பித்துக் கொண்டும் புறக்கணித்துக் கொண்டும் இருக்கின்றன... சிலவகை செல்கள் ஒரு வயசுக்கப்புறம் புதுப்பிக்கப்படுவதே இல்லை*

*1961 –இல் லியனார்டு ஹேஃப்ளிக் என்கிற அமரிக்க டாக்டர், ஓர் உடலின் திசுக்கள் மொத்தமும் ஐம்பது தடவைதான் புதுப்பித்துக் கொள்கின்றன என்று கண்டறிந்தார். உள்ளுக்குள்ளே ஒரு மானசீகக் கடிகாரம் இந்தச் சுய ரிப்பேரைக் கட்டுப்படுத்துகிறது. ஹைட்ரோ கார்டிஸோன், விட்டமீன் ஈ போன்ற வஸ்துக்கள் இந்த ஐம்பதை நூறாக்குகின்றன என்று கண்டுபிடித்துள்ளார்''*[3].

*இயற்கையாக நாம் வாழும் சூழலுக்கேற்ப இதயம் இயங்கும் சூழலினை இங்கு உணர்த்துகின்றன.*

*மனித ஆராய்ச்சி*

*மனிதர்களை குறித்த ஆராய்ச்சியானது காலங்காலமாக நடந்துகொண்டுதான் உள்ளது. இதன் வாயிலாகவே அதன் செயல்பாடுகளை தெளிவுற அறிந்துகொள்ள முடிகின்றது. இதனை,*

*' சமீபத்தில் அமெரிக்காவில் டானியல் கீஸ் என்பவர் இந்த ஆபரேஷனை ஒரு வெள்ளெலிக்கும் ஒரு மனிதனுக்கும் செய்தார்; செய்து ஆச்சரியப்படத்தக்க முடிவுகளைவெளியிட்டார். கார்டன் என்கிற அந்த மனிதன் உங்களைப் போல எழுதப் படிக்கத் தெரியாத பாமரனாக மிகக் குறைந்த அறிவு மட்டத்தில் இருந்தவன் . ஆப்பிரேஷனுக்குப் பிறகு மிகச் சில தினங்களில் அவன் அறிவு சிக்கலான கணக்குகளையும் சிக்கலான புத்தகங்களையும் படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்கு விருத்தியாகிவிட்டது என்று ஆபரேஷனின் முழு விவரங்களும் கொடுத்திருந்தார். அந்தச் சிகிச்சையை நாமும் செய்து பார்த்தால் என்ன என்று எனக்கும் டாக்டர் பெர்னாண்டஸூக்கும் தோன்றியது.*

*எத்தனை வேகமாக நீங்கள் இந்த அறிவை பெற்றீர்களோ, எத்தனை விரைவில் நீங்கள் எல்லாவற்றையும் கொண்டீர்களோ, அத்தனை விரைவில், ஏன் அதைவிட விரைவில் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் மறந்துவிடுவீர்கள். அதுதான் அந்த ஆப்ரேஷனில் சிக்கல்'*

*(சுஜாதா., மி.மு.ஒ. 1.2.1., ப. எண் 72)*

*மனிதர்கள் மீது செய்யப்படும் ஆராய்ச்சிகளினால் ஏற்படும் விளைவுகளை இங்கு விளக்கியுள்ளது.*

*" மூளையை மாற்றி அமைக்க அடுத்த நூற்றாண்டின் இறுதிவரைக் கூட சாத்தியமில்லை என்கிறார்கள். ஏனெனில் மூளையினுள் இருக்கும் கோடானு கோடி இணைப்புகளை முழுவதும் புரிந்துகொள்ள நூறு வருஷமாகும்"*[4]

*மூளைகளில் சிப்புகளை அமைக்கும் சூழலில் இன்று ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மருத்துவம் தொழில்நுட்பம் இரண்டும் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளது.*

*சூரியன்*

*சூரியன் எதிர்காலத்தில் கதிர்வீச்சுகளை பெருமளவு செலுத்தும் சூழல் உருவாகும் வாய்ப்புள்ளது. இதனை,*

*'ரவி அவன் நாடித் துடிப்பைப் பரிசோதித்தான். ரவிக்கு வெளிறிப் போயிருந்த தேகம்! எல்லாமே வெளுப்பு, வெயில் படாத வெளுப்பு, ப்ரோட்டின் குறைவினால் உடலில் ஒரு சோனித்தனம். அடுத்த வாரம் இவனுக்கு ஒரு ப்ரோட்டின் பிஸ்கட் கிடைக்கும். ஒன்றே ஒன்று. நெற்கதிர்கள் ரேடியேஷனில் ஜொலிக்கின்றன... சீசனுக்கு சீசன் பூத்துப் பழுத்து முதிர்ந்து உதிர்ந்து மறுபடியும் பூத்துப் பழுத்து... ஒன்றையும் தொட முடியாது. ரேடியேஷன்!*

*பூமிக்கு அடியே இருக்கிற தானியத்தைப் பகிர்ந்துகொண்டு, இருக்கிற நம்பிக்கைகளைப் பகிர்ந்துகொண்டு, மெலிதாக வம்ச விருத்தி பண்ணிக்கொண்டு,தினம் தினமாக, தலைமுறை தலைமுறையாக... எப்படி நூற்றி எழுபது வருஷங்களைக் கழிக்கப் போகிறோம்? என்று எண்ணினான் ஆத்மா.'*

*(சுஜாதா., சூரியன்., பக். எண்., 154,160)*

*மனிதர்களுக்கு தேவையான வைட்டமின் சத்துக்கள் சூரியனிடமிருந்து தடைபடும் போது மக்களுக்கு பல்வேறு சத்து குறைபாடுகள் ஏற்படும் சூழல் உருவாகும் என குறிப்பிடுகின்றது.*

*முடிவுரை*

*சுஜாதாவின் விஞ்ஞான சிறுகதைகள் குறிப்பிடும் மருத்துவம் குறிப்பிடுவதாவது மக்கள் இயற்கையான உணவு முறைகளை பின்பற்றாது வாழ்ந்தால் ஏற்படும் மரபணு பாதிப்புகளை விளக்கியுள்ளது. நவீன மருத்துவத்தால் தன் அருகில் இருப்பவர் மனிதனா இயந்திரமா என ஆராயும் சூழலை உருவாக்கும் நிலையை குறிப்பிட்டுள்ளது. உடற்பயிற்சி நல்ல உணவு பழக்கவழக்கங்கள் மனிதனின் வாழ்நாளினைக் கூட்டும். நவீன மருத்துவத்தால் உடலின் மூளை சம்பந்தமான உடல் பிரச்சனைகளை தீர்க்கும் சூழலினை விளக்கியுள்ளது. சூரிய கதிர்களின் தாக்கத்தையும் அதனால் ஏற்படும் சத்து குறைபாடுகளைக் குறித்தும் இக்கட்டுரை விரிவுற விளக்கியுள்ளது.*

*முதன்மை ஆதாரம் :*

*சுஜாதா – சுஜாதாவின் விஞ்ஞானச் சிறுகதைகள்*
*உயிர்மை பதிப்பக வெளியீடு,*
*டிசம்பர் – 2002.*

*துணைமை ஆதாரம் :*

*சுஜாதா – அடுத்த நூற்றாண்டு*
*விசா பப்ளிகேஷன் வெளியீடு,*
*ஜூலை – 1990.*

*மேற்கோள்கள்*

*1. தினமணி., 8 ஆகஸ்ட் 2017*

*2. சுஜாதா., அடுத்த நூற்றாண்டு., ப.எண்.,171*

*3. மேலது., ப.எண்., 172*

*4. மேலது., ப.எண்., 172*

********* ********* ********** ********* ********* ********** ********** **********